திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அரசாங்கம் மார்க்கெட்டிங் கமிட்டியையும் நியமித்துவிட்டு, தனியார்களும் நெல் கொள்முதல் செய்யலாம் என்று அனுமதி வழங்கியிருக்கிறது. மார்க்கெட்டிங் கமிட்டியிடம் கொடுத்தால் விவசாயிகளுக்கு நல்ல இலாபம் கிடைக்கிறது, கமிஷனும் அதிகமாகப் போவதில்லை யென்று சொல்லுகிறார்கள். அந்த முறையை இனிமேலாவது கையாண்டு, நெல் கொள்முதல் செய்கிற உரிமையைத் தனியார் களுக்குக் கொடுக்காமல் மார்க்கெட்டிங் கமிட்டியிடமே நேரடியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்த உத்தேசம் இப்பொழுது இல்லை.

Water-supply to Coimbatore City

* 209 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether a conference of the Chief Minister and the Public Works Minister of Kerala along with some of the Ministers of Tamil Nadu was arranged to be held at Coimbatore in 1968 to discuss the water problem and to discuss the proposals regarding the water-supply to Coimbatore city;

(b) whether both the Ministers of Kerala were present cn the agreed day at Coimbatore; and

(c) the details of our Ministers participated in the conference and the result thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) முதல் (உ) வரை : கோயம்புத்தூருக்குக் குடிநீர் வழங்கு திட்டத்தை குறித்து கேரள அமைச்சர்களும் தமிழ்நாட்டு அமைச்சர்களும் சந்தித்துப் பேச எந்த ஏற்பாடுகளும் 1968-ல் செய்யப்படவில்லை. கேரள முதல் அமைச்சரும் கேரள பாசன அமைச்சரும் 25—4—1968-அன்று நமது அரசாங்க அதிகாரிகளுடன் திட்டமிட்டுள்ள அணைப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர். சிறுவாணியாற்றிலிருந்து கோயம்புத்தூருக்குக் குடிநீர் வழங்கும் வசதியைப் பெருக்கு வதற்கான திட்ட அறிக்கை கேரள அரசிற்கு அனுப்பப்பட்டு அவர் களுடைய சம்மதம் எதிர்பார்க்கப்படுகிறது.

Komarapalayam Bridge

* 210 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether cracks have developed in the Komarapalayam Bridge?

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா : ஆம், இப் பாலத் தின் நீள வாட்டத்தில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : போக்குவரத்துக்கு மிகவும் சௌகரியமாக இருக்கக்கூடிய முறையில் இந்தப் பாலத்தை உடனடியாக ரிப்பேர் செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

[1969 செப்டம்பர் 11

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரூ. 73.10 இலட்சத்தில் புதிய பாலம் அமைப்பதற்கு அனுமதி கோரி மத்திய அரசாங்கத்திற்கு எழுதப்பட்டுள்ளது. எனவே, இதற்காக ரூ. 10,000 ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ஏ. எம். இராஜா : இப்பொழுது காவேரி பாலம் மிகவும் வீக்-ஆக இருப்பதால் அதை உடனடியாகப் பழுது பார்த்து—இப்பொழுது போக்குவரத்திற்கு அது மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. ஒரு புறம் இருந்து லாரியோ, பஸ்ஸோ வந்தால் மறு புறத்தில் எதுவும் போகமுடியவில்லை. ஆகவே, உடனடியாக அந்தப் பாலத்தை—தற்காலிகமாக அகலப்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிரந்தரமாகப் பரிகாரம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னால் டெல்லியில் அமைச்சர்களைச் சந்தித்த நேரத்தில் இந்தத் திட்டத்தை விரைவாக எடுத்து நடத்துவதாக அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பவானியும் காவிரியும் சங்கமமாகிற இடத்தில் இரண்டு பாலங்கள் இருக்கின்றன. அந்த இரண்டையும் ஒரே பாலமாக காவிரியில் அமைத்தால் நன்ருக இருக்கும் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படி என்ருல் அதைக் கட்டுவதற்கு சர்க்கார் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரே பாலமாக அமைக்க ஒரு செயற்குறிப்பு ஆராயப்பட்டு வருகிறது. போர்ஸ் ஆப் ரிவரை கணக்கெடுத்து வருகிருர்கள். டெல்லியில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களைச் சந்தித்துப் பேசிய நேரத்தில் இதை விரைவாக நிறைவேற்றித் தருவதாக அவர்கள் வாக்களித்துள்ளார்கள்.

சீர்காழி—கும்பகோணம் சாலை

*211 விஞ.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகர எல்லைக்குள் உள்ள அரசாங்க நெடுஞ்சாலையை (சீர்காழி—கும்பகோணம் சாலை) விரிவாக்கும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாயூரம் நகராட்சி எல்லைக்குள் உள்ள சீர்காழி-கும்பகோணம் சாலையை விரிவு படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போதைக்கில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இதே கேள்விக்கு சென்ற ஆண்டில் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ரூ. 1,25,000 மதிப்பீட்டில் ஒரு திட்டம் இருப்பதாகவும், பண வசதி